**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 49/2021**
**U/s.** 120(b),448,342,506(1),392 **IPC**
**PROSECUTION WITNESS NO. 6 (LW. 11)**

| | | |
|---|---|---|
| **Name** | : திரு**.** ராமதாஸ் **(IO)** | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2026** |

**2,3** எதிரிகள் ஆஜர்**. (1** வது எதிரி **Split up Cc,No. 271/2026** பிடிக்கட்டளையில் உள்ளார்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.49/2021 30.06.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்:**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட தனிபிரிவு காவல் ஆய்வாளராக பணிபரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 08.01.2021 ம் தேதி தஞ்சாவூர் கிழககு காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மலையபெருமாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூல புகாரினை அப்போது பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பூபாலன் என்பவர் பெற்று நிலைய குற்ற எண் 19/2021 சட்டபிரிவு 448,342,506(1),380 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன் நகலினை புகார்தாரருக்கு வழங்கினார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கினை புலன் விசாரணை நிமித்தம் எனது பார்வைக்கு வைக்கப்பட்டதை நான் பார்வையிட்டு 08.01.2021 ம் தேதி இரவு 9.00 மணியளவில் வழக்கில் சம்பயிடமான தஞ்சாவூர் கீழவாசல் ஆட்டு மந்தை தெருவில் அமைந்திருந்த வாதியின் வீட்டினை சம்பவயிட சாட்சிகள் ஜெயகாந்தன் மற்றும் மீரான் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 8, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளான மலையபெருமாள், சாந்தி, பாலாஜி, நிவேதா , ரதிமீனா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், சம்பவயிட விசாரணையிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் 16.01.2021 ம் தேதி காலை 9.00 மணிக்கு தஞ்சாவூர் ்தொல்காப்பியர் சதுக்கம் அருகில் 1 வது எதிரி வைத்திஸ்வரன் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், 1 வது எதிரி எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளோ இன்றி தாமாக முன்வந்து கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுரேஷ் மற்றும் வினோத் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்பு அவர் தாமாக எடுத்து ஆஜர் செய்த 8 பவுன் மதிப்புடைய தங்க ஆரம் –1 ( 64 கிராம் எடை) , பவுன் தோடு ஒரு ஜோடி சுமார் 8 கிராம், TN 76 AE 6618 சில்வர் நிற புல்லட் இருசக்கர வாகனம் –1 ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பாக தஞ்சாவூர் தொல்காப்பியர் சதுக்கத்தில் 10.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் திரேக பரிசோதனை தக்க வழிகாட்டுதலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கின் தடயப்பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 10 , கைப்பற்றுதல் மகசர் அசாஆ 11 , படிவம் 91 அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 19.1.2021 ம் தேதி வழக்கில் தொடர்புடைய 2 வது எதிரி விவேக் என்பவரை காலை 8.00 மணிக்கு தஞ்சாவூர் சாந்தபிள்ளைகேட் மேம்பாலம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்தவரை காரணம் கூறி கைது செய்தும், எதிரியை நிலையம் ஆஜர் செய்து திரேக பரிசோதனை செய்து அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு சாட்சிகள் சுரேஷ் மற்றும் வினோத் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு, பூபாலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் தொடர்புடைய 3 வது எதிரி ராமகிருஷ்ணன் எதிர்பார்ப்பு பிணை பெற்றதால் வழக்கின் புலன் அத்துடன் முடித்து வழக்கின் சட்டபிரிவுகளை 448,342,506(1),380 இதசவிலிருந்து 120(b), 448,342,506(1),392இதசவாக சட்டபிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டபிரிவுமாறுதல் அறிக்கை அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 11.02.2021 ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

**1.** சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 1.5 கிமீ இருக்கும். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு நடந்து வந்தாலே 30 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். அசா1 கொடுத்த புகாரில் காணாமல்போனதாக சொல்லப்படும் நகையின் எடை , வடிவம் குறித்த விவரங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. புகாரில் பணம் காணாமல் போனதாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலோ, எனது விசாரணையிலோ எதிரிகள் முகமூடி அணிந்து வந்ததாக சொல்லியுள்ளரா என்றால் அவ்வாறு கூறவில்லை. எதிரிகள் அடையாளம் காண்பதற்காக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. புகாரில் மூவரில் ஒருவர் துப்பாக்கி போன்ற பொருளால் தன்னை மிரட்டியதாக

சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து, புகார் பெறப்பட்ட நேரம் இரவு 8.00 மணி . அதற்கு முன்பே அசா1 புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அசா1 முதல் அசா4 வரையானவர் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகாமையில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 6–7 வீடுகள் உள்ளன.

2. அசா1 ன் மளிகை கடை அவரது வீட்டிற்கு எதிர்ப்புறம் உள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரம் ,இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து எவ்வித தடயபொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அசா1 யிடம் ஓட்டுநராக பணிபுரிந்தவர்கள் என்றால் சரியல்ல. 16.01.2021 கைப்பற்றபட்ட தடயபொருளை நீதிமன்றத்திற்கு 09.2.2021 அன்று தான் அனுப்பட்டது என்றால் சரிதான். அந்த இடைப்பட்ட கால கட்டத்தில் தடயபொருள் யார் வசம் இருந்தது என்பதற்கு எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. அசா1 எனது விசாரணையில் இரவு 1.00 மணியளவில் தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனை சென்றதாக கூறியுள்ளார் என்றாலும், அவர் யார், யாருடன் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் தனது மகனுடன் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்லியுள்ளார். எனது விசாரணையில் சுரேஷ் என்பவர் வாகனம் ஓட்டியதாக சொல்லியுள்ளரா என்றால் சொல்லவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது ஒரு பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் தடயபொருள்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றாற் போல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.